DBCY publication

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-40
ISSN :XXX-XXXX

# ராஜம்கிருஷ்ணனின் குறிஞ்சித்தேன் நாவலில் சிறுதெய்வ வழிபாட்டு நம்பிக்கைகள்

**வெ. வளர்மதி**
**பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ்த்துறை**
**இஸ்லாமியக்கல்லூரி (தன்னாட்சி)**
**வாணியம்பாடி 635 752**
**vvalamathikathiravan@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழிக்கேற்ப தெய்வ வழிப்பாட்டின் சிறு தெய்வ முறைகளையும், நம்பிக்கைகளையும் பற்றி ராஜம்கிருஷ்ணனின் குறிஞ்சித் தேன் என்னும் நாவலின் வழியாகவும், சிறுதெய்வ நம்பிக்கை காலத்தால் சிதைவு படாமல் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த ஆய்வுக் கட்டுரையில் வழிபாட்டின் தோற்றம், சமுதாய அமைப்பு, பஞ்சாயத்து, பூஜை அறை, தெய்வம், கோவில், சடங்குகள், பால் கறக்கும் முறை, தெய்வத்திற்கு தீ மிதித்தல், நம்பிக்கைகள்,போன்றவற்றை ராஜம்கிருணனின் குறிஞ்சித்தேன் நாவலில் குறிப்பிட்டுள்ள மலைவாழ் மக்களின் வாழ்க்கையை காண்பதே ஆய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

1. வெக்கிச் செடி
2. சோமவாரம்
3. மொச்சை
4. குழல்
5. பரண்கள்

**முன்னுரை**

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-40
ISSN :XXX-XXXX

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழி வழங்கும் நாடு நமது நாடு. கடவுள் நம்பிக்கை என்பது தொன்மையானது மனிதன் தன் உணவிற்காக விலங்குகளைப் போல் காட்டிலும் அலைந்து திரிந்து மிகப் பழங்காலத்தில் இடிஇ மின்னல்இ நெருப்புஇ காற்று வெள்ளம் முதலிய இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சினான் வழிபடுவதன் மூலம் அவற்றின் சீற்றத்திற்கு ஆளாகமல் இருக்கலாம் என்ற அடிப்படையில் தான் வழிபாடுகள் தோற்றம் பெற்றன. பயன்படும் பொருள்களையும் வணங்கினான். காலப்போக்கில் உருவவழிபாடும் பல்வகை விழாக்களும் தோற்றம் பெற்றன. எச்செயலைச் செய்தாலும் இறைவனை எண்ணிச் செய்வதே மக்கள் இயல்பாயிற்று **“கடலோடு கலக்கும் ஆறுகள்** போல எல்லா தெய்வ வணக்கமும் என்னையே அடைகிறது. என்று கண்ணபிரான் சொன்னது உண்டு ஆறுகளைக்கூட எண்ணிவிடலாம். ஆனால் தெய்வங்களையும்இ தேவதைகளையும் வழிபாடுகளையும் எண்ணுவதும் எழுவதும் அரிதினும் அரிது. இந்நிலையில் மக்களின் தெய்வ வழிபாட்டின் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் பற்றி குறிஞ்சித் தேன் என்னும் நாவலில் காண்போம்.

**வழிபாடு விளக்கம்**

மக்கள் இயற்கையைக் கடவுளாக வழிபடத் தொடங்கிய காலத்திலிருந்தே தெய்வழிபாடு சிறப்பிடம் பெற்றுவிட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுஇ வழிபாடு என்னும் சொல் வணங்குதல்இ தொழுதல்இ கீழ்படிதல்இ பொருளில் அமைகின்றன. விழிபடுதல் என்பது தெய்வத்தை வழிபடுதலையும் குறிக்கும் தெய்வங்களை வழிபடுவதன் மூலம் மனிதர்கள் குறிப்பிட்ட சில தன்மைகளை உறுதியாக பெறமுடியும் வழிபாடு என்ற சொல் ஆனது கொரவம்இ கண்ணியம் வணக்கம் மதிப்பு என்ற பல பொருட்களைக் குறித்து நின்கின்றன.

**வழிபாட்டின் தோற்றம்**

உலகில் மக்கள் பல்வேறு வழிபாடுகளை நிகழ்த்தி வருகின்றனர். சூரியன்இ சந்திரன்இ விண்மீன்கள்இ ஐம்பெரும் பூதங்கள்இ ஆறுஇ கடல்இ மலைஇ விலங்குஇ பாம்புஇ புற்றுஇ வேல் முதலியன ஆரம்ப காலக்கட்டத்தில் மக்களுடைய வாழ்க்கை வழிபாடுகளாக வழிப்பட்டன. தெய்வ வழிபாடு தோன்றுவதற்கு எதிரிகளைப் பற்றிய அச்ச உணர்வே காரணம் என்றே கூறுகின்றன. தெய்வ வழிபாடனது அச்சம்இ போராட்டம்இ நன்றியுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றியது. இவ்வாறு தோன்றிய தாலாட்டுப் பாட்டில் தொடங்கி ஏர்பாட்டுஇ ஏற்றப்பாட்டுஇ கும்மிப்பாட்டுஇ கதைப்பாட்டு என எவ்வகைப் பாட்டிலும் பக்தி மணம் கமழக் காண்கிறோம்.

**படகர்**

குறிஞ்சித்தேன் என்னும் நாவல் மலையில்வாழும் மக்களை மையமாக வைத்து எழுத்தப்பட்டது நீலகிரி மக்கள் என்றால் நம்மில் பலருக்கும் ஆதிக்குடிகளான தொதவரே நினைவுக்கு வருவார்கள். நீலகிரியைத் தாயமாகக் கொண்டு வாழும் மக்களின் இந்த மலையின் வரலாற்றிற்கும் வளத்திற்கும் பெருமைக்கும் காரணமாக இருப்பவர் இவர்களே எனலாம். பதினெட்டாவது நூற்றாண்டில் மைசூரை அரசாண்ட திப்பு சுல்தான் ஆட்சியின்போது படகர் மைசூரிலிருந்து பண்டியூர்க் காட்டின் வழியாக நீலகிரிக்கு வந்ததாக அறிகிறோம்.

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-40
ISSN :XXX-XXXX

**சமுதாய அமைப்பு**

தொதவர்கள் இனத்தவர் மண்ணில் பாடுபடாதவர்கள்இ அவர்களுக்குச் சொந்தமான மலையில் வந்து படகர்கள் குடியிருப்பதால் அதற்கு ஈடாக அறுவடை தானியம் கொடுக்கப்பட்டது. சட்டியும்இ பானையும்இ அரிவாளும் கொட்டும்இ ஈட்டியும் செய்து தந்தும்இ வாழ்வுக்கும் சாவுக்கும் மேளமும் தாளமும்இ அளித்து வருகிற மற்றொரு இனமாகிய கோத்தருக்குத் தானியம் கொடுக்கப்பட்டது. மேலும்காட்டுக் குறும்பரிடம்இ மாயம் என்று அஞ்சி அவர்கள் கேட்டதெல்லாம் அளிக்கப்படுகிறது (**கு.தேஇ ப.** 44)

**பஞ்சாயத்து**

கிராம சபை பற்றி ஒரு நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. "கோவிலுக்கு முன் விரிந்திருக்கும் சமவெளியான மைதானமே குடியிருப்பின் பஞ்சாயத்துக் கூடும் பொது இடம்இ கரியமல்லர் ஊரில் ஒரு தவறும் அதிகாரி அவர்இ அவருடைய ஆணையில்இ அந்த மரகத மலையும்இ மணிக்கல் ஹட்டியும்இ அடுத்துச் சுற்றியுள்ள் சின்னக் கொம்பைஇ கீழ்மலை முதலான குடியிருப்புகளும் அடங்கி அவர் மதிப்பும் செல்வாக்கும் வைத்திருந்தன. சுற்றியுள்ள அந்த ஐந்தாறு குடியிருப்புகளில் உள்ளவர்களுக்கும் பொதுவான விழாக்கள் உண்டு. விதைக்கவும்இ விதைத்த பலனை அனுபவிக்கவும் விழாக்களுக்கு நாள் நிச்சயிக்கவும் கூட்டம் போட்டுத் தீர்மானங்கள் செய்து கொள்வார்கள்" **கு.தே. பக்** 44 – 45)

**பூஜை அறை**

ஒரே மாதிரியான ஹட்டியின் இல்லங்கள் தாழ்ந்து குறுகிய வாயில்களைக் கொண்டவையாய் இரு முக்கியமான பகுதியை உடையனவாய் அமையப் பெற்றவை. முன்புறம் சிறு வராந்தாவைப் போன்ற பகுதியை ஒட்டிஇ ஒவ்வொரு வீட்டிலும் வெளிமனை என்ற பகுதி உண்டு. அதை அடுத்துஇ உள்மனை என்ற பகுதியில் வாயிலுக்கு நேர் வளைவு சமையற்பகுதியைப் பிரிக்கும் உள் மனையின் வலது ஓரத்தில்இ பால்மனை அல்லது புஜையறைஇ சுவரோடு ஒட்டிய வளைவு வாயிலில் சுவர்த் தண்டில் எல்லா இடங்களுக்கும் வெளிச்சம் தெரியும்வண்ணம் தீபமாடம் அமைக்கப் பெற்றிருக்கின்றன. மேலே மூங்கிலால் ஆன பரண்களும் உண்டு. **கு.தேஇ ப.** 23)

**தெய்வம்இ இ கோவில்இ சடங்குகள்**

படகர் ஈசனின் உயிர்த்தோற்றமாகச் சூரியனை வணங்கினர். "காலையில் எழுந்ததும் கிழக்கு நோக்கிப்பொங்கிவரும் செங்கதிரோனையே கும்பிடுவார். (கு.தே. ப. 3)) ஒளிக் கடவுளே நீ வாழி மழையைத் தந்து மண்ணைச் செழிக்க வைக்கும் மா வள்ளலேஇ நீ வாழிஇ எங்களுக்கு உள் அருளையும் ஆசியையும் நல்குவாய்!" இவ்வாறு கூறிக்கொண்டேஇ எருமைகளையும் கன்றுகளையும் அவர்கள் அவிழ்த்துவிடுவர். இருளைக் கண்டால் அச்சம்இ காடுகளில் வசிக்கும் குறும்பர். இருளில்தான் எவரும் அறியாமல் மந்திரமாயங்கள் பற்றி கதைகளைக் குறித்தனர். சிறு குழந்தைகள் மனதில்கூட தெய்வநம்பிக்கை ஆழமாக வேரூன்றியிருந்தது.

**பால் கறக்கும் முறை**

பால் கறக்கும் அந்த வேளை அவர்களுக்குப் புனிதமான வேளைஇ இறைவனை வழிபடுகையில் கடைப்பிடிக்கும் புனிதவிதிகள் அனைத்தும்இ பால் கறக்கும் முறைகளைக்

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-40
ISSN :XXX-XXXX

கடைப்பிடிக்க வேண்டியவை. கொட்டிலுக்குச் சென்று மூங்கிற்குழாய் வழிய வழியக் கறந்தபாலைப் பெரியபானையில் ஊற்றிக்கொண்டு அவன் வரும்போது பெண்கள் எவரும் குறுக்கே வரமாட்டார்கள் பேசு மாட்டார்கள். பால்மனையாகிய புனித அறைக்குள் அவர்கள் புகவும் மாட்டார்கள். அப்படிப் புனிதமாகக் கறந்த பாலை அடுப்பிலிட்டுக் காய்ச்சமாட்டார்கள்இ பேதைப் பருவம் தாண்டிய பெண்கள்இ அந்நாட்களில் பாலை அருந்தவும் மாட்டார்கள் (**கு.தே. ப.** 24) ரங்கனுக்கு பால்மனை புகுவதற்கான உரிமை சோமவாரம் (திங்கள் கிழமை) நடக்கிறது. அதிகாலையிலேயே வீடு மெழுகிச் சுத்தம் செய்து சுடுநீர் வைத்து அனைவரும் நீராடினர். கிழங்கும் கீரையும் மொச்சையும் தினையும் அரிசியும் வெல்லமும் அந்தச் சிறிய சமையற்கட்டில் அருகில் நூறுபேர் விருந்துக்குக் குவிந்தனர். முதல் ஈற்றுக் கன்றுடன் மொழுமொழுவென்று நின்ற காரி எருமையைக் குறிப்பாட்டி மணிகள் கட்டி அலங்கரிப்பதில் ரங்கனின் தந்தை ஈடுபட்டிருந்தான். ரங்கன் புது உள்ளபடையும் மேலாடையும் அணிந்து அலங்கரித்த பொம்மைபோல் நின்று கொண்டிருந்தான்.

### தெய்வத்திற்கு தீ மிதித்தல்

தீ மிதிக்கும் முறை அதை செய்வதற்கு முன் கடைபிடிக்கப்படும். பின்வருமாறு. "மழிக்கப்பட்டுச் சந்தனம் பூசிய தலைகளுடனும் கதம்ப மாலைகளுடனுமாக எழுவர் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் வந்தார்கள். கோத்தரின் குழல்இ கொம்புஇ தாரைஇ தப்பட்டை முதலிய வாத்தியங்கள் விண் அதிர ஒலித்து முழங்கின. காவடி போன்ற பிரம்பு வில்களைத் தோள்களில் தாங்கிக்கொண்டு ஏழு முறைகள் குதித்துக் கடந்தார்கள்" (**கு.தே. ப** 159) தீ மிதிப்பதற்காகஇ மூன்று மாதங்கள் விரதமிருந்துஇ கோணியில் படுத்துஇ புனிதம் காக்க வேண்டும்.

### நம்பிக்கைகள் வழக்கங்கள்

ஹோணே என்ற மூங்கிற் பாற்குழாயில் வெண்ணுரையாகப் பால் பொங்கிவரும் பழையகாலத்தில் மாடுகள் நிறைய பால் கறக்க வலிமை வரவேண்டுமென்று வலத்துாள் படையில் இரும்பை பழுக்கக் காய்ச்சி சூடுபோடுவார்கள். வலியையும் வேதனையையும் பொறுத்தால்தான் வலிமை பெருகும் என்று நம்பினர். குழந்தை பிறந்தவுடன்இ பெரியவளான பாட்டியிடம் ஆசிபெறும் வழக்கம் இருந்தது. குழந்தையின் மாமன்இ "நல்ல வீட்டில் வாழ்க்கைப்பட்டு ஒன்று விதைத்தால் ஓராயிரம் பெருகஇ "விடு நிறைய மக்களுடன் சுகமாக இருக்கட்டும்." என்று வாழ்த்தி குழந்தையின் நாவில் பாலை வைப்பது பழக்கம் (கு.தேஇ ப. 26) யாரேனும் வீட்டிற்கு வந்தால் பருக மோர் தந்து உபசரிப்பது படகர்களின் விருந்தோம்பல் வழக்கமாக உள்ளது. வீடுகளில் மூங்கிலிலான பரணில் வீட்டுக்கு வேண்டிய தானியங்கள் இ கிழங்குகள் முதலிய பண்டங்களைச் சேமித்து வைக்கும் பழக்கம் இருந்தது. வெக்கிச் செடியை கல்லில் அரைத்து தலையில் தேய்த்துக்கொண்டால் அழுக்குப்போகும் என்று நம்பி பெண்கள் இதைத் தலையில் தேய்த்து நீராடினர். உணவில் புளி சேர்த்தால் இரத்தம் கெடும் என்று நம்பினார். இதனால் புளி இல்லாமலே குழம்பு வைத்தனர். நோயுற்றவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றால்இ இறந்து விடுவார்கள் என்று நம்பினார்கள். இதற்கு கேற்ப லிங்கையாவை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல அவன் மனைவிஇ அண்ணன் இருவருமே எதிரிப்பு தெரிவிக்கின்றனர். அம்மைநோய்இ மாரியம்மனுக்கு பூஜை நடத்தினால் போதும் மருத்துவரிடம் தடுப்பு ஊசி தேவையில்லை என்று மாதி நம்புகிறாள்.

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-40
ISSN :XXX-XXXX

புனித சடங்கான பால்மனை புகும் உரிமைச்சடங்கு நிறைவேறும் நாளிலே உருமையைப் புலி அடித்துக் கொல்வதுஇ ஏதொ தீமை வருவதற்கான குறிப்பு என்று லிங்கையா அஞ்சுகிறான் (**கு.தே.ப.** 59) படகர் கனவுகளை நம்பினர். கனவுவழி நிகழ்ப்போவது உணர்த்தப்படுகிறது. ஜோகியை தீ காக்க அனுப்பவேண்டும் என்று இறைவன் கூறுவதாக லிங்கையா கனவு காண்கிறான். அவன் அதை மாற்ற நினைத்தும் தோற்கிறான். பின்னர் எப்போதும் புலியுடன் பொருதுகொண்டே இருப்பதாகக் கனவு காண்கிறான். அவனே கூறுவது போல வாழ்க்கையில் நோயோடு போராடி வெல்கிறான். நஞ்சுண்டேஸ்வரர் அவன் கனவில் வந்துஇ ஜோகிக்குப் புத்ர பாக்கியத்தை அளிப்பதும் சுட்டப்பட்டுள்ளது.

**முடிவுரை**

குறிஞ்சித்தேன் என்னும் நாவலில் படகர்களின் நம்பிக்கைகள் பழக்கங்கள் சடங்குகள் முதலானரவை ஆசிரியர் ராஜம்கிருஷ்ணன் அழகாக படம்பிடித்துக்காட்டியுள்ளார். மலை வாழ் மக்களின் வாழ்க்கையை எதார்த்தமாகச் சித்தரித்துள்ளார். மேலும் சிறு தெய்வ நம்பிக்கை காலத்தால் சிதையுபடாமல் காக்கப்படவேண்டும் என்ற சீறிய எண்ணத்தால் நாவலாசிரியை ராஜம்கிருஷ்ணன் அவர்கள் இவற்றை குறிஞ்சித்தேனில் பதிவு செய்துள்ளமை நமக்கு சிறந்ததொரு ஆவணமாக உள்ளது மேலும் இது நமக்கு கிடைத்தற்குகரியா பெட்டகமாக அமைந்துள்ளது.

**பயன்பட்ட நூல்**

1. **ராஜம்கிருஷ்ணன்** - **குறிஞ்சித்தேன்**
தாகம் பதிப்பகம்
ஜி3 – மாசிலாமணி தெரு
பாண்டி பஜார் தி. நகர்
சென்னை - 17